*'கஜா' புயலால் பாதிப்படைந்த மாவட்டங்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. 'கஜா' புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நிவாரண உதவி வழங்கவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் உயிரிழந்த கால்நடைகளுக்கும், சேதமடைந்த பயிர்களுக்கும் உரிய நிவாரண உதவி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.*

*மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'கஜா' புயலால் பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், ஆறுதலையும் தெரிவித்தார்கள்.*

*'கஜா' புயலின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கும், நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த அரசுப் பணியாளர்களுக்கும் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.*

[பேரவைத் தலைவர்] [2019 ஜனவரி 3

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இம்மாமனிதர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், கஜா புயலின் தாக்கத்தினால் இன்னுயிரை இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், நிவாரணப் பணிகள் மேற்கொண்டபோது தங்கள் இன்னுயிரை இழந்த அரசுப் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)*

## (ஏ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, மூன்று முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெருமைமிகு இச்சட்டமன்றத்தில் மக்கள் பணியாற்றிய மூத்த உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் இயற்கை எய்திவிட்டார்கள்.

திரு. ஏ.கே. போஸ், தலைமைமீது மாறாத விசுவாசம் கொண்ட சிறந்த தொண்டர் ஆவார். மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்மீது அளவிலா பாசம் கொண்டவர். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்மீது மாறாத மதிப்பைக் கொண்டவர்.

திரு. ஏ.கே. போஸ் சிறந்த பண்பாளர், எம்.ஏ. ( அரசியல்) பட்டம் பெற்றவர், உழைப்பாளர், உழைப்பாளர்களுக்கு ஊக்கம் அளிப்பவர். பரந்த உள்ளமும், பெரிய மனதும் கொண்ட திரு. ஏ. கே. போஸ், கழகத் தொண்டர்களிடத்திலும், பொதுமக்களிடத்திலும் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார்.

சட்டமன்ற உறுப்பினராக தனது தொகுதிக்காகவும், தான் சார்ந்த மதுரை மாவட்ட மக்களுக்காகவும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அப்பணிகளைச் செய்திட வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கோரிக்கைக் கடிதங்களை கொடுத்துக்கொண்டே இருப்பார். அந்த நடவடிக்கை அவரது கடைசிக் காலம் வரை தொடர்ந்தது. அந்தக் கடிதங்களில், அவரது தொகுதி சார்ந்த, தொகுதி மக்கள் சார்ந்த கோரிக்கைகள்தான் இடம் பெற்றிருக்கும். அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை அவர் ஓயமாட்டார், உறங்கமாட்டார். மதுரை மாவட்டத்திலும், தனது தொகுதி மக்களிடத்திலும் அவர் பெற்றிருந்த செல்வாக்குக்கும், நற்பெயருக்கும் இதுவே சான்றாகும்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மதுரை மக்களவைத் தொகுதி வேட்பாளராக மாண்புமிகு அம்மா அவர்களால் திரு. ஏ.கே. போஸ் தேர்வு செய்யப்பட்டு, போட்டியிட்ட நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, நான் அங்கு தேர்தல் பணியாற்றியபோது, மதுரை மாநகர மக்கள் அவர்மீது எந்தளவுக்கு பாசம் வைத்திருந்தார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டேன்.

சட்டமன்ற உறுப்பினர் பதவியில் நியாயமாகவும், நேர்மையாகவும் உழைத்து, கழகத் தொண்டர்களின் அன்பையும், பொதுமக்களின் நன்மதிப்பையும் ஒருசேரப் பெற்று, மதுரை மண்ணின் நம்பிக்கைக்குரிய மைந்தனாகத் திகழ்ந்த திரு. ஏ.கே. போஸ் அவர்களின் மறைவுக்கு கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

## தீர்மானம்

"2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்தும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மதுரை (வடக்கு) தொகுதியிலிருந்தும் மற்றும் 2016 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்தும்

தொடர்ந்து 3 முறை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புற பணியாற்றியவரும், கழகத்திற்கு விசுவாசமாக இருந்து செயல்படுபவர் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பெருமையாகக் குறிப்பிடப்பட்டதோடு, அவரின் நன்மதிப்பைப் பெற்றவரும், தனது தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், பழகுவதில் இனிய பண்பும், அனைவரிடத்திலும் அன்பு கொண்டவரும், கட்சிப் பாகுபாடின்றி பழகி அனைவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவரும், பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் உறுப்பினருமான திரு. ஏ.கே. போஸ் அவர்கள் 2-8-2018 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவால், அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 94 ஆண்டுகள் வாழ்ந்து, தான் பிறந்த நாட்டுக்காகவும், தான் சார்ந்த கட்சிக்காகவும் அயராது உழைத்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய தலைவர். சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், தமிழ்ப்பற்றாளர், பத்திரிகையாளர் என பன்முகம் கொண்ட ஆற்றலாளர். திரைப்படத் துறையில் கோலோச்சியவர். பேச்சாற்றல்மூலம் தனது கட்சித் தொண்டர்களை மட்டுமல்லாமல், அனைத்து தரப்பினரையும் கவர்ந்திழுக்கக்கூடிய வல்லமை பெற்றவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். அரசியலில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தவர்களும் அவருடைய அழகுத் தமிழுக்கு ஆட்பட்டவர்களாகவே விளங்கினார்கள்.

1947 ஆம் ஆண்டில் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த ராஜகுமாரி திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதத் தொடங்கி, பராசக்தி, மனோகரா என அவரது திரைப் பணி தொடர்ந்தது. பின்னர், பாசக்கிளிகள், உளியின் ஓசை, பொன்னர் சங்கர் என சொல்லிக்கொண்டே போகலாம். இறுதியாக, தொலைக்காட்சியில் ஸ்ரீராமானுஜர்-மதத்தில் புரட்சி செய்த மகான் என்ற சிறப்பான தொடரை எழுதினார்கள்.

முற்பகல் 10-20

75-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனமும் எழுதியவர். 15 நாவல்களையும், 20 நாடகங்களையும் படைத்தவர். தூக்குமேடை நாடகத்திற்காக நடிகவேள் திரு. எம்.ஆர். ராதா அவர்களால் 'கலைஞர்' என்று பட்டம் பெற்றவர்.

15 சிறு கதைகளையும், 200-க்கும் மேற்பட்ட கவிதைகளையும் படைத்தவர். தனது கட்சியினருக்கு "உடன் பிறப்பே" என்னும் தலைப்பில் 7000-க்கும் மேற்பட்ட மடல்கள் தீட்டியவர். கேள்வி எழுப்பி, அதற்கு பதிலும் எழுதி, தனது கருத்துகளை உரக்க உரைக்க, அந்தக் கேள்வி-பதில் பகுதியை கருவியாக்கிக் கொண்டவர்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்களுடைய சிறப்பான குணநலன்கள் குறித்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் பார்த்து பாராட்டலாம். அவரது ஓயாத உழைப்பையும், அந்த உழைப்பின் பயனாய் அவர் பெற்ற உயர்வையும் எண்ணி வியக்கிறோம். வயது முதிர்ந்த நிலையிலும், அதிகாலை எழுந்து, யோகா பயிற்சி, நடைபயிற்சி என உடற்பயிற்சி செய்வது, அப்பொழுதே அனைத்து நாளிதழ்களையும் படித்து முடிப்பது, முரசொலிக்கு கட்டுரை, கேள்வி-பதில், மடல் என எழுதுவது, கட்சி அலுவலகத்திற்கு வந்து பணியாற்றுவது என அவர் ஒவ்வொரு மணித்துளியையும் வீணாக்காமல் பணி செய்த பாங்கு அனைவராலும் பாராட்டி, பின்பற்ற வேண்டிய சிறப்புக்குரியதாகும்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மாணவப் பருவம் முதலே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தவர். தனது 15-வது வயதில் 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்து ஏட்டை நடத்தியவர். இந்தி மொழியின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தவர், பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். சமூக நீதிக்காகவும் பாடுபட்டவர்.

தந்தை பெரியாரின் சீடராக "குடியரசு" இதழில் பணியாற்றி, திராவிடர் கழகத்தினுடைய எழுத்தாளராக, பகுத்தறிவுப் பேச்சாளராக தமிழகம் முழுவதும் உலா வந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்மீது அளவில்லா அன்பும், மரியாதையும் கொண்டு, அண்ணா அவர்களின் அன்புத் தம்பியாக பாசம் காட்டியவர். அண்ணாவின் ஆற்றல்மிகு தொண்டனாக பரிமளித்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்கள், அன்புத் தம்பிகள் என்றே குறிப்பிடுவார். அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக்

கழகத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதலமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதில் முக்கியப் பங்காற்றியவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் அரசியலைக் கடந்து சிறந்த நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம், அரசியல் ரீதியாக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இரண்டு தலைவர்களுமே கலைஞர் மு. கருணாநிதிமீது மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இப்பேரவையில் பணியாற்றியிருக்கிறேன். அப்போது, இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இதே அவையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக 11-11-2008 அன்று நான் பேசியதைக் குறிப்பிட்டு, மறுநாள் முரசொலியில் “பச்சைத் தமிழர் பன்னீர்செல்வம்” என்று குறிப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

மறுநாள் 12-11-2008 அன்று, அவையில் அதனைக் குறிப்பிட்டு நான் பேசினேன். அதற்குப் பதிலளித்துப் பேசிய கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், “பச்சைத் தமிழர் பன்னீர்செல்வம் அவர்கள் அதற்காக கவலைப்படக்கூடாது. பச்சைத் தமிழர் என்று பெருந்தலைவர் காமராஜருக்கு, பெரியார் பட்டம் கொடுத்தார். அதைத்தான் முரசொலி கொடுத்திருக்கிறது. அதுவும் முரசு அடித்துக் கொடுத்திருக்கின்றது” என்று கூறியது பசுமையாக என் நினைவில் இன்றும் உள்ளது.

சட்டமன்றக் கொறடா, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், போக்குவரத்துத் துறை அமைச்சர், முதலமைச்சர் எனப் பல்வேறு பதவிகளை வகித்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்புகின்ற வினாக்களுக்கும், ஐயங்களுக்கும் தெளிவாகவும், சாதுர்யமாகவும், சிலேடையாகவும், நகைச்சுவையாகவும் பதிலளிப்பதில் வல்லவர்.

*2019 ஜனவரி 3]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*முற்பகல் 10-25*

*2006 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியின்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மைதீன்கான் அவர்கள் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தார்கள். ஒரு நாள் கேள்வி நேரத்தின்போது, துணைக் கேள்வியில், அவரைச் சுட்டிக்காட்டி, "அமைச்சர் அவர்களைப் பார்த்தால், அதாவது, அண்ணன் திரு. மைதீன்கான் அவர்களைப் பார்த்தால் மல்யுத்த வீரரைப் போலத் தெரிகிறார்கள்; உண்மையில் அவர் எந்த விளையாட்டு வீரர்?" என்று நான் கேள்வி எழுப்பினேன். உடனே, முதலமைச்சராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அவர் அந்தமாதிரி விளையாட்டெல்லாம் விளையாட மாட்டார் என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார். இப்படி ஒரே வார்த்தையில், ஒரு கணத்தில் அவையையே கலகலப்பாக்கிவிடும் திறமை படைத்தவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். சுதந்திர தினத்தன்று மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவரும் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்தான்.*

*கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உடல் நலக் குறைவாக இருப்பதை அறிந்து, கடந்த வருடம் ஜூலை மாதம் நானும், சக அமைச்சர்களும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து விசாரித்தோம். அவர் பூரண நலமடைய வேண்டுமென்ற எங்களது விருப்பத்தினையும் தெரிவித்தோம்.*

*அதன் பின்னர், உடல் நிலை சற்று தேறி வந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், திடீரென கடந்த ஆகஸ்ட் மாதம் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து, நாங்கள் அனைவரும் ஆற்றொணாத் துயரம் அடைந்தோம். அவருடைய இழப்பு நம் அனைவருக்கும் பேரிழப்பாகும். குறிப்பாக, அவரது குடும்பத்தினருக்கும், அவரது கட்சியினுடைய தொண்டர்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும் என்பதைத் தெரிவித்து, கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:*

## தீர்மானம்

*"இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், தமிழக அரசியலில் மட்டுமின்றி, இந்திய அரசியலிலும் தனது முத்திரையைப் பதித்தவரும், 1957 ஆம் ஆண்டு முதல் போட்டியிட்ட அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றி பெற்ற சிறப்புக்குரியவரும், 1984-1986 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றியவரும், 1969 ஆம் ஆண்டு*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2019 ஜனவரி 3*

*தமிழகத்தினுடைய முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்று, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றிய பெருமை பெற்றவரும், 50 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் தலைவராகத் திகழ்ந்தவரும், பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 7-8-2018 அன்று மறைவுற்ற செய்தியறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*மறைந்த மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தனது 14-வது வயதிலேயே சமூக இயக்கங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்; சமூக நீதிக்காகப் போராடியவர்; அரசியல் மட்டுமின்றி, தமிழ் திரைப்படங்களுக்கு திரைக்கதை மற்றும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வசனங்களை எழுதி தனது திறமையை வெளிப்படுத்தியவர். தமிழ் மொழிமீது மிகுந்த பற்று கொண்டு இலக்கியம், நாடகம், கவிதை மற்றும் பத்திரிகை என பல்வேறு துறைகளில் எண்ணற்ற சாதனைகள் படைத்து, அனைவராலும் பாராட்டப் பெற்றவர்.*

*மறைந்த முன்னாள் முதலமைச்சரும், பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் மறைவு தமிழ்நாட்டிற்கு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும், அன்னாரது மகனும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் பேச தாங்கள் அழைத்தபோதெல்லாம் உணர்ச்சியோடும், எழுச்சியோடும் நான் எழுந்து நிற்பேன். ஆனால், இன்றைக்கு நீங்கள் என்னைப் பேச அழைக்கின்றபோது, எனது உடல் தளர; உள்ளத்தில் சோகம் வழிய; துக்கம் தொண்டையை அடைக்க ஒரு துவண்ட நிலையில் நான் நிற்கிறேன். காரணம், எத்தனையோ நிலைகளில், எத்தனையோ பொருள் பற்றி*

*2019 ஜனவரி 3]* [திரு. துரைமுருகன்]

*இந்த அவையிலே நான் பேசியிருந்தாலும், இரங்கல் குறித்துப் பேசுகின்ற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.*

*முற்பகல் 10-30*

*காரணம், தாங்கள் இன்றைக்குப் படித்த அந்தப் பெரியவர்கள் எல்லாம் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்கள் என்று எண்ணுகிறபொழுது, இதயம் சுமையாகிறது. கிட்டத்தட்ட 12 சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்து போயிருக்கிறார்கள்; மறைந்து போயிருக்கிறார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த 12 சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி உங்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். இவர்கள் அனைவரும் நம்மோடு இந்த அவையிலே இருந்தவர்கள்; அவர்கள் அத்தனை பேரோடும் நான் நன்றாகப் பழகியிருக்கிறேன், பேசியிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு அந்த 12 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டதே என்பதை எண்ணுகிறபொழுதுதான், இதயம் வெடிக்கிறது.*

*அதேபோன்று, அகில இந்திய அளவில் மிகப் பெரிய தலைவரான இந்திய முன்னாள் பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களை நெருக்கமாக அறிகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. காவேரி பிரச்சினை தொடர்பாக இடைக்கால ஆணையம் அமைக்க வேண்டுமென்பதற்காக எங்கள் தலைவர் கலைஞர் அவர்களோடும், மற்ற மாநில முதல்வர்களோடும் அவருடன் பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர் மிக சாதுர்யமாகப் பேசக் கூடியவர்; எங்கள் தலைவர் அவர்களும் அவர்களிடத்திலே உரிமையோடு பேசுவார்;* Right man in the wrong Party *என்று சொல்வார். அவர் சிரித்துக்கொண்டே முதுகிலே தட்டுவார்.*

*அதேபோன்று திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் இங்கிருந்து நல்ல புகழோடு சென்றவர். திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார். அவர் மிகப் பெரிய அறிஞர்.*

*'சிந்துசமவெளி நாகரிகம்', 'திராவிட நாகரிகம்' ஆகியவற்றை ஹிராஸ் பாதிரியாரும், சர் ஜான் மார்ஷெல்லும் தான் முதன்முதலாக நமக்குச் சுட்டிக்காட்டினார்கள். அதற்குப் பிறகு, அதுகுறித்து*

கொச்சையான theories உருவானபோது, மீண்டும் அது 'திராவிட நாகரிகம்' தான் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கு ஆயிரம் ஆதாரங்களை உலகின்முன் கொண்டுவந்து நிறுத்தியவர், திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள். எனவே, அவருக்கும் இன்றைக்கு நாம் அஞ்சலி செலுத்தியிருக்கிறோம்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, எங்களுடைய தலைவர் அவர்களும் திரு. 'நெல்' ஜெயராமன் அவர்களுக்கு நிதி வழங்கி, பார்த்துவிட்டு வந்தார்கள். மருத்துவர் எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் எல்லோராலும் பாராட்டப் பெற்றவர். அவருக்கும் நாம் இன்றைக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறோம். "கஜா" புயலால் உயிரிழந்தவர்களை எல்லாம் இந்த ஆட்சியின் மாண்புமிகு அமைச்சர் எல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள் என்று தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி பாராட்ட வேண்டியதுதான். அதேபோன்று எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் போனார்கள். மற்ற எல்லா கட்சிக்காரர்களும் போனார்கள். கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் போனார்கள் என்பதை நினைக்கிறபொழுது, அந்த நிகழ்வு நம்முடைய இதயத்தை எந்த அளவிற்கு தொட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இத்தனைக்கும் மேலாக, இந்த மன்றத்திலே மூன்று முறை உறுப்பினராக இருந்தவர், நண்பர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள். அவர் அரசியலுக்கு அப்பாற்பட்டு மிக நெருக்கமாகப் பழகக்கூடியவர்; குறிப்பாக, என்னிடத்தில் நீண்ட காலமாகவே நட்பு கொண்டிருந்தவர்; பொதுவாக, அவருக்கு அந்த மூலையில் முதல் சீட் இருக்கும். இப்போது எனக்கு நேராக இங்கே சீட் இருக்கிறது. இங்கு உட்கார்ந்தவுடன் நான் திரு. போஸ் என்று குரல் கொடுப்பேன். என்னை நோக்கி அவர் கையை காட்டுவார்கள். என்னைவிட, நண்பர் திரு. கே.என். நேரு அவர்களிடத்திலே திரு. போஸ் மிக நெருக்கமாக இருக்கக்கூடியவர். அவருடைய பெருந்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு; திருப்பரங்குன்றம் தேர்தலில் அவர் நின்றபோது, அவரை எதிர்த்து பிரசாரம் செய்வதற்காக நான் திருப்பரங்குன்றம் சென்றேன். ஓர் ஊரில் அவர் வண்டி, என்னுடைய வண்டியை முந்திச் சென்றது. வண்டியைவிட்டு அவர் இறங்கியவுடன், 'எப்போது வந்தீர்கள்? எங்கு தங்கியிருக்கிறீர்கள்?' என்று என்னிடம் கேட்டுவிட்டு, காலையில் டிபன் அனுப்பட்டுமா என்று கேட்டார். அந்த அளவிற்கு பண்போடு இருக்கக்கூடிய

*2019 ஜனவரி 3]* [திரு. துரைமுருகன்]

நண்பர். எனவே, அவருடைய மறைவு, பெரிய சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இவற்றையெல்லாம் நினைக்கிறபொழுது, எனக்கு வேதனையாக இருக்கிறது.

அதைவிட, *95* ஆண்டுக்காலம் வாழ்ந்து, வாழ்ந்த அந்த *95* ஆண்டுக்காலத்தில், *80* ஆண்டுகளுக்கும் மேலாக தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்குமாகவே உழைத்துவிட்டு, இன்று அவரை ஆளாக்கிய ஆசான் அறிஞர் அண்ணா அவர்கள் உறங்குகிற இடத்திற்கு அருகிலே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிற, முன்னாள் முதல்வர், எந்நாளும் தமிழ் மக்கள் மத்தியிலே தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கின்ற, எங்கள் உயிரினும் மேலான, தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவிற்கு இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற இரங்கல் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எங்கள் தலைவர் தளபதி அவர்களின் சார்பில் கனத்த இதயத்தோடும், மாளாத துயரத்தோடும், கண்ணீரை அடக்கிக் கொண்டு நான் பேச முற்படுகிறேன்.

முற்பகல் *10-35*

கலைஞர் அவர்கள் ஒரு தனி மனிதர் அல்ல. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அவர் பன்முகத் தோற்றம் கொண்டவர். சுயமரியாதைச் சுடர், சமூகப் போராளி, அரசியல் வித்தகர், நிருவாகத்திலே மேதை, சாதனைச் செம்மல், சரித்திர நாயகன், இலக்கிய வேந்தன், கவிதைக் கடல், கற்பனைத் தேர், பொங்கு அருவியும் கடல் அருவியும் கொண்டு புரட்சிகரமான வசனங்களையெல்லாம் திரையிலே தீட்டிய ஒரு புரட்சியாளர் என்று இப்படிப் பல்வேறு முகங்களைக் கொண்டவர்தான் எங்களுடைய தலைவர். அவரை ஒரு முகத்தோடு அடக்கிவிட முடியாது. ஆனாலும் எல்லாவற்றையும்விட இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில், அவர் எல்லாமுமாகி இருந்தவர். எங்கள் தலைவர் வாழ்ந்த மொத்த நாட்கள் *34,258;* அதாவது, *95* ஆண்டுக்காலம். அவர் சட்டமன்றத்தில் பணியாற்றிய நாட்கள் *20,411;* அதாவது, *56* ஆண்டுக்காலம். *95* ஆண்டுக்காலம் வாழ்ந்தவர். அந்த *95* ஆண்டுக் காலத்தில், *56* ஆண்டுக்காலம் அதாவது தான் வாழ்ந்த காலத்தில் பாதிக்குமேல் இந்த அவையிலேயே பணியாற்றி இருக்கின்றார்கள் என்று சொன்னால், இந்த அவையிலே எப்படி ஒன்றிப்போய் இருந்திருக்கின்றார்கள் என்பது தெரியும். மாண்புமிகு முன்னவர்

[திரு. துரைமுருகன்] [2019 ஜனவரி 3

அவர்கள் தெரிவித்ததைப்போல், எங்களுடைய தலைவர் அவர்கள் 13 தேர்தல்களில் நின்றவர், வென்றவர், எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தவர், எதிர்க்கட்சிக் கொறடாவாக இருந்தவர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர், அமைச்சராக இருந்தவர், முதலமைச்சராக இருந்தவர். இப்படி எல்லாமுமாகி இந்த அவையிலே 56 ஆண்டுக்காலம் பணியாற்றி இருக்கின்றவர். அதிலே முதலமைச்சராகப் பணியாற்றிய நாட்கள் 6,863 அதாவது, 9 ஆண்டுகள். இந்த 95 ஆண்டுகளில் கட்சியினுடைய தலைவராக இருந்தது 17,908 நாட்கள்; அதாவது 49 ஆண்டுக்காலம். ஆக அவருடைய வாழ்க்கை முழுவதும் இப்படி மற்றவரோடு ஒன்றியிருந்து, மகத்துவத்தை எய்தியவர் கலைஞர் அவர்கள். எனவே, இந்த அவையிலே நீண்டகாலம் இருந்து பணியாற்றி இருக்கின்றவர் தலைவர் அவர்கள். ஆனால், எவ்வளவு நாட்கள் வாழ்ந்தார்கள் என்பது அல்ல முக்கியம். ஒருவன் எவ்வளவு நாள் வாழ்ந்தான், எத்தனை பதவிகளை அனுபவித்தான் என்பதல்ல முக்கியம். ஆனால், வாழ்ந்த காலத்தில் என்ன சாதித்தார்கள் என்பதுதான் முக்கியம்.

“தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்”

என்று சொன்னார் வள்ளுவர். தக்கார் தகவிலர் என்பது அவர்களுடைய பிள்ளைகளை வைத்துதான் சொல்ல முடியும் என்று பரிமேலழகர் அவர்கள் உரை எழுதி இருக்கின்றார்கள். ஆனால், அது நல்ல உரை அல்ல. காரணம், பிள்ளைகளைப் பார்த்து அப்பாவை எடை போட முடியாது. சர்ச்சிலினுடைய மகளைப் பார்த்து சர்ச்சிலை எடை போட முடியாது. மகாத்மா காந்தியினுடைய பிள்ளைகளைப் பார்த்து மகாத்மா காந்தியை எடை போட முடியாது. ஆக, தக்கார் தகவிலர் என்பது, எச்சம் என்பது அவர்கள் ஆற்றிவிட்டு, விட்டுச் சென்றிருக்கின்ற பணியினை வைத்துதான் அவர்களுடைய திறமைகளையும், நல்லவரா, கெட்டவரா என்பதனையும், என்ன சாதித்தார் என்பதையும் பார்க்க முடியும். அப்படி எங்களுடைய தலைவர் அவர்கள் இத்தனை ஆண்டுக்காலம் இங்கே 56 ஆண்டுக்காலம் உறுப்பினராக, 9 ஆண்டுக்காலம் அமைச்சராக, முதலமைச்சராக இருந்த காலத்தில் எல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க அநேக காரியங்களை, இன்னும் நூறு ஆண்டுகளானாலும் நினைத்துப் பார்க்கக்கூடிய காரியங்களையெல்லாம் செய்திருக்கின்றார்கள்.

*2019 ஜனவரி 3]* [திரு. துரைமுருகன்]

அவற்றையெல்லாம் தொகுத்து நான் பேசவேண்டுமானால் நீண்ட நாட்களாகும். அவற்றில் முக்கியமானதை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

காலவெள்ளத்தால் அழிந்துபோகாத வரலாற்றுச்சாதனைகளை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் செய்திருக்கின்றார்கள். மதராஸ் என்றிருந்ததை சென்னையாக மாற்றியிருக்கின்றார்கள். நம்முடைய முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல் இது ஒரு குடியரசு நாடு. ஆகஸ்டு 15, ஜனவரி 26 இந்த இரண்டு நாட்களிலும் தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு கவர்னர் ஏற்றுகின்றபோது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு ஏற்ற உரிமை இல்லையா என்று அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்தில் கேட்டபோது, ஆகஸ்டு 15 சுதந்திர தினத்தன்று நீங்கள் கொடி ஏற்றுங்கள் என்று சொன்னார்கள். அன்றிலிருந்துதான் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் ஆகஸ்ட் 15 - சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றுகின்ற அந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

*முற்பகல் 10-40*

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எந்நாளும் என் மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராக புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுகிறபோது, 'நான் இந்தக் கொடியை ஏற்றுகிறேன் என்றால், இந்தக் கொடியேற்றுகிற உரிமையை எனக்குப் பெற்றுத் தந்தவர் என் நண்பர், முன்னாள் முதலமைச்சர் கலைஞர்' என்று நன்றிப் பெருக்கோடு தெரிவித்தார்கள். அந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்தவர், கலைஞர் அவர்கள்.

அதேபோல், தமிழ்நாட்டிலே, தமிழ் மொழிக்கு ஒரு வாழ்த்துப் பாடல் இல்லையே என்கிற ஏக்கம் நீண்ட நெடுங்காலமாக இருந்தபொழுது, மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய பாடலிலிருந்து 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடலை அன்றைக்கு கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். அதனை எல்லா அரசாங்கங்களும் பின்பற்றிக்கொண்டு வருகின்றன.

அதேபோன்று, உலகத்திலே, செம்மொழி, classical language என்று சொன்னால், Hebrew, Latin, Greek, Sanskrit. ஆனால், எந்த மொழியும் தற்போது உயிரோடு கிடையாது. அந்த மொழிகளுக்கு,

classical language, செம்மொழி என்ற அந்தஸ்து மட்டும் இருக்கிறது. ஆனால், கல் தோன்றி, மண் தோன்றா காலத்திற்கு முன்னால், அகமும், அது பாடிக் காட்டுகிற கலிங்கத்துப் பரணியும், ஆடி ஒலிக்கிற சிலம்பும், பாடி மகிழ்கிற பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் கொண்டிருக்கிற இந்த மொழிக்கு செம்மொழி, classical language என்ற அந்தஸ்து இல்லை என்பதற்காகப் போராடி, இந்த மொழிக்கு செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றுத் தந்தவர், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

நான் ஒன்று சொல்கிறேன். இந்த மண் உள்ளளவும், தமிழ் இருக்கும்; தமிழ் மக்கள் இருப்பார்கள். தமிழ் மக்கள் இருக்கிற வரையிலே, தமிழ் மொழி இருக்கும். தமிழ் மொழி இருக்கிற வரையில் அதற்கு செம்மொழி என்ற பெயர் இருக்கும். அந்தப் பெயர் இருக்கிற வரையிலே எங்களுடைய தலைவருடைய பெயரும் அதில் இருக்கும் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான், முக்கடல் கூடுகிற இடத்தில், முப்பாலைத் தந்த திருவள்ளுவருக்கு 133 அடியில் சிலை அமைத்துக் காட்டினார். இந்தியாவில் தற்போது இருப்பது, Federal Constitutional system. மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் இருக்க வேண்டும். ஆனால், மத்தியில் இருப்பவர்கள் எஜமானர்களாகவும், மாநில அரசுகள் அவர்களுடைய ஏவலர்களாகவும் இருக்கக் கூடாது என்பதற்காக, 'மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி' என்ற தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக ராஜமன்னார் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, மாநில சுயாட்சியை இந்தியா முழுவதிலும் கொண்டுவந்து சேர்த்தவர், கலைஞர் அவர்கள்.

அதேபோன்று, பெண்களுக்கு சொத்திலே பங்கு உரிமை நடைமுறையில் இல்லாமல் இருந்தது. 1924-ல் சுயமரியாதை மாநாட்டில் கேட்கப்பட்ட பிறகுதான், பெண்களுக்கு சொத்திலே சமபங்கு உண்டு என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, காலாகாலத்திற்கு அதனை நிலைநிறுத்தியவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்.

உள்ளாட்சியிலே பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு; வேலைவாய்ப்பிலே பெண்களுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு; என்று அத்தனையும் கொண்டுவந்தவர் கலைஞர் அவர்கள்.

*2019 ஜனவரி 3]* [திரு. துரைமுருகன்]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சென்னை உயர் நீதிமன்றம் தொடங்கப்பட்டு, 160, 170 ஆண்டுகள் ஆகியிருக்கும். இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். ஆனால், அந்தக் காலக்கட்டத்திலிருந்து சுமார் 125 ஆண்டுக்கால உயர் நீதிமன்ற வரலாற்றில் நீதிபதியாக இருந்தவர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தை, சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்கூட நீதிபதியாக பதவி ஏற்கவில்லை. 125 ஆண்டுக்கால உயர் நீதிமன்ற வரலாற்றில், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் ஒருவர்கூட நீதிபதியாக அமரவில்லை. ஏன் தெரியுமா? அவர் நீதிபதியாக அங்கே உட்கார்ந்தால், கீழே இருக்கிறவர்கள்* 'Oh, My Lord' *என்று அழைக்க வேண்டும்.* 'Oh, My Lord' *என்று சொன்னால், 'ஓ, என் கடவுளே' என்று அர்த்தம். ஒரு தாழ்த்தப்பட்டவரை 'ஓ என் கடவுளே', என்று சொல்ல வேண்டுமென்பதற்காக அதை சில பேர் நிறுத்தி வைத்திருந்தார்கள். அந்த நிலையை மாற்றி, உடைத்து, தந்தை பெரியாருடைய சீடன் என்பதற்காக, ஜோலார்பேட்டையிலிருந்து வரதராஜன் என்பவரைக் கொண்டு வந்து, இதே உயர் நீதிமன்றத்திலே நீதிபதியாக உட்கார வைத்து, யார், யார் சொல்ல மறுத்தார்களோ, அவர்கள் அவ்வளவு பேரையும்,* 'Oh, My Lord' *என்று சொல்ல வைத்த பெருமை எங்கள் தலைவர் கலைஞருக்கு உண்டு. அதுமட்டுமல்ல, அவரை உச்ச நீதிமன்றம்வரை கொண்டுசென்று உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர வைத்து, ஒரு வரலாற்றைப் படைத்தவரும் எங்கள் தலைவர் கலைஞர்தான்.*

*அதேபோன்று, சாஸ்திரம் படித்தால், சம்பிரதாயம் தெரிந்தால், பூஜை, புஷ்பாஞ்சலி முறைகள் தெரிந்தால், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அவருடைய காலத்திலே அது முடியவில்லை. நெஞ்சில் முள்ளோடு பெரியார் போய்விட்டார். ஆனாலும், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து வரலாற்றைப் படைத்தவரும் கலைஞர் அவர்கள்தான்.*

*அதேபோன்று,* May Day—*தொழிலாளர்கள் தினம். தொழிலாளர் தினத்தை,* May Day *என்று சொல்வார்கள்; அவ்வளவுதான். ஆனால்,* May Day-*தொழிலாளர்கள் தினத்திற்கு, முதன்முதலாக, தொழிலாளர்களுக்காக சம்பளத்தோடு, விடுமுறை அளித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். கம்யூனிஸ்டு கட்சிகள் ஆண்ட*

[திரு. துரைமுருகன்] [2019 ஜனவரி 3

மாநிலங்களில்கூட முன்பு May Day-க்காக, சம்பளத்தோடுகூடிய விடுமுறை கிடையாது. பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள்தான் திரு. வி.பி. சிங் அவர்களிடத்திலே சொல்லி, இந்தியா முழுவதும், May Day-க்கு சம்பளத்தோடுகூடிய விடுமுறையை விடச்செய்தவர். இந்தியாவில் May Day-க்கு, ஏன் ரஷ்யாவிலும்கூட, அதற்கு ஒரு symbol கிடையாது. நேப்பியர் பூங்காவை, மே தினப் பூங்காவாகப் பெயர் மாற்றி, அங்கே ஒரு symbol-ஐ, சிலையாக வடித்துக் காட்டியவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். பேருந்துகளை தேசியமயமாக்கியது கலைஞர் அவர்கள்தான். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சலுகை வழங்குவதற்காக சட்டநாதன் கமிஷனை அமைத்து, அதைக் கொண்டுவந்து காட்டியவர் கலைஞர் அவர்கள்.போலீஸ்காரர்களுடைய வாழ்வு உயர்வதற்காக மூன்று முறை போலீஸ் கமிஷனை அமைத்துக் காட்டியவர், கலைஞர் அவர்கள்.

*முற்பகல் 10-45*

அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த நாட்டில் emergency-ஐ அமல்படுத்திய நேரத்தில், யாரும் பேசக் கூடாது, எழுதக் கூடாது என்று சொன்ன காரணத்தினால், அனைவரும் பேச பயப்பட்டார்கள். அப்போது அதனை தைரியமாக எதிர்த்தவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்காக விலை கொடுத்தவர்கள் நாங்கள்; எங்களைப் போன்றவர்களெல்லாம் ஓராண்டுக்காலம் மிசா கைதிகளாக, வேலூர் சிறையில் முடங்கிக் கிடந்தோம். இங்கே உட்கார்ந்திருக்கின்ற எங்கள் தளபதி அவர்கள், சிறைச்சாலையில் பல்வேறு அடிகளை வாங்கி, ஓராண்டுக்குமேல் சென்னை சிறையில் இருந்துவிட்டு, வெளியே வந்தார்கள். ஆக, அதை எதிர்த்து, பெருமைப்படும் வகையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றியவர் அவர். அதே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், ‘வருத்தப்படுகிறேன்’ என்று சொன்னபோதுதான், “நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சியைத் தருக” என்று அடுத்து அவர் சொன்னார்.

அதுமட்டுமல்ல; அதேபோன்று, மத்தியில் திரு. வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மண்டல் கமிஷனைக் கொண்டுவந்து, அதனை நிறைவேற்றிட பெருந்துணை புரிந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். வெள்ளைக்காரன் காலத்திலிருந்து, அரசு ஊழியர்களுக்கென்று Confidential Report என்ற முறை இருந்து வந்தது. ‘ அது தேவையில்லை; அது பழங்கால முறை; வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டபோது, நம்மைக்

*2019 ஜனவரி 3]* [திரு. துரைமுருகன்]

*கண்காணிப்பதற்காக வைத்திருந்த முறை அது' என்று சொல்லி, அந்த* Confidential Report *முறையை நீக்கிக் காட்டியவரும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.*

சேலம் உருக்காலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம், சென்னை மெட்ரோ, சேது சமுத்திரத் திட்டம், Industrial Corridor போன்று பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டுவந்தவரும், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோன்று, காவேரிக்கு நடுவர் மன்றம் அமைத்து, இடைக்காலத் தீர்வு பெற்று, இறுதித் தீர்ப்பையும் பெற்று, ஒரு வரலாற்றைப் படைத்தவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய், 136 அடியிலிருந்து 142 அடி வரை நீரைத் தேக்கிட தீர்ப்பைப் பெற்றுத் தந்தவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தான். கோவைக்கு சிறுவாணி ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தவர்; சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வந்து சேர்த்தவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அதுமட்டுமல்லாமல், மனிதனை அமரவைத்து மனிதன் இழுத்துச் செல்லும் கை ரிக்ஷா இழுக்கும் திட்டத்தை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷா வழங்கியவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். மனிதனுடைய கழிவை மனிதனே அகற்றுவது சரியல்ல; இதுபோன்ற கேவலம் நடைபெறக் கூடாது என்று சொல்லி, அதற்கு மாற்று ஏற்பாடு செய்து காட்டியவரும், தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர் 40 அணைகளைக் கட்டினார்; பல்வேறு பாலங்களைக் கட்டினார். தமிழ் முஸ்லிம்களைப்போல், உருது முஸ்லிம்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டபோது, அதை வழங்கியவரும் அவர்தான். கொங்கு வேளாளர் பெருமக்களும், 'நாங்களும் விவசாயிகள்தானே? ஏன் எங்கள் கொங்கு வேளாளர் பெருமக்களைப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பிரிவில் சேர்க்கவில்லை' என்று கேட்டபோது, அந்த கொங்கு வேளாளர் பெருமக்களையும், backward class-ல் சேர்த்து, அவர்களுக்கு சலுகைகளை வழங்கியவரும், கலைஞர் அவர்கள்தான்.

அதேபோன்று, வன்னியர் உட்பட பிற சீர்மரபினர்களுக்கு 20 சதவிகித இடஒதுக்கீடு என்று சிறப்பான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்தியவரும், தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோன்று, மத்திய சர்க்காருக்கு இணையாக, மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தி வழங்க உத்தரவிட்டவரும் கலைஞர் அவர்கள்தான். இப்படி பல திட்டங்களை நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இங்கு மட்டுமல்ல; நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல், பல குடியரசுத் தலைவர்களை உருவாக்கியவர் அவர். ஒரு மாநிலக் கட்சித் தலைவர்தான் அவர். ஆனால், குமரியில் இருந்துகொண்டு, இமயத்தைத் தொட்டுக் காட்டியவர் அவர். நியாயமாகப் பார்த்தால் குடியரசுத் தலைவராக யாரை நியமிக்க வேண்டுமென்று, புதுதில்லியில் இருப்பவர்கள் சொல்ல வேண்டும். ஆனால், இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக திரு. வி.வி. கிரி அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கோபாலபுரத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் தெரிவித்தார். அவர்தான் அன்றைக்கு ஜனாதிபதி ஆனார். அதேபோன்று, யாரை அடுத்த ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பது என்ற நிலை ஏற்பட்டது. அப்போது, ஒரே வகுப்பினர் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்துக்கொண்டிருந்த நிலை இருந்ததைச் சுட்டிக்காட்டி, இந்திரா காந்தி அம்மையாரைப் பார்த்து, 'ஒரு பிற்படுத்தப்பட்டவன், ஒரு தாழ்த்தப்பட்டவன் ஏன் அந்தப் பதவிக்கு வரக் கூடாதா?' என்று கலைஞர் அவர்கள் கேட்டார். 'யார் இருக்கிறார்கள்?' என்று அவர் கேட்டார். 'ஏன்? உங்களிடம் Zail Singh இருக்கிறாரே, என்று சொன்னார். தவான் உயிரோடு இருக்கிறார்.தவானை அழைத்து, 'Zail Singh பிற்படுத்தப்பட்டவரா?' என்று கேட்டார். 'ஆமாம், அவர் பொற்கொல்லர்' என்று அவர் சொன்னவுடன், அடுத்து அவர் குடியரசுத் தலைவராக ஆக்கப்பட்டார். அந்தப் பதவியில் ஒரு பிற்படுத்தப்பட்டவரை அமர வைத்து, வரலாறுகளைப் படைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அதேபோன்று, வங்கிகளைத் தேசியமயமாக்குவது; இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 'வங்கிகளை தேசியமயமாக்குங்கள், மன்னர் மானிய முறையை ஒழியுங்கள்' என்று முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர். அப்போது வங்கத்து முதல்வர், திரு. ஜோதிபாசு அவர்கள், 'எனக்கு முன்பு நீ முந்திக் கொண்டாய், கருணாநிதி' என்று கைகொடுத்து கலைஞரை வாழ்த்தினார்கள். அதேபோன்றுதான் பலவற்றைச் செய்து காட்டியவர் தலைவர் கருணாநிதி அவர்கள்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சரியாகச் சொன்னார். அவர் ஒரு மாநிலக் கட்சித் தலைவராக இருந்தாலும், அகில இந்திய அரசியலைப் பொறுத்தவரை அரசியல் வித்தகராக, குழப்பம் ஏற்படுகிறபோது பிரதமர்களைத் தேர்ந்தெடுப்பவராக, குடியரசுத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பவராக இருந்த

*காரணத்தால்தான், அகில இந்திய அளவில் முக்கியத் தலைவராக அவர் கருதப்பட்டார். எனவேதான், அவர் மறைந்தபோது, தேசியக் கொடி பாராளுமன்றக் கட்டடத்தில் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. லோக் சபா, இராஜ்ய சபா ஆகிய இரண்டு அவைகளிலும் புகழஞ்சலி செலுத்தப்பட்டு, இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டன. அதேபோன்று இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களினுடைய தலைமைச் செயலகங்களிலும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு, அவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. ஆக, இப்படி சொந்த மாநிலத்திலும், அகில இந்திய அளவிலும் நிலையான புகழைச் சேர்க்கக்கூடிய பல்வேறு காரியங்களை, பணிகளையெல்லாம் செய்தவர், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.*

*முற்பகல் 10-50*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு வருத்தம். ஒரு சாதாரண குடியானவனின் மகனாக நான் சென்னைக்கு வந்தேன். எனக்கு சென்னையைப் பற்றி தெரியாது. எனக்கென்று அப்போது இங்கு யாரும் கிடையாது. நான் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் சேருவதற்காக வந்தபோது, எனக்கு வழி தெரியவில்லை. அப்போது ஜெமினி பாலம் அருகில் ஜெமினி ஸ்டுடியோ இருந்தது. அங்கிருந்து தகரப் பெட்டியைத் தலையில் சுமந்துகொண்டு, வழி தெரியாமல், கேட்டுக்கொண்டே போய் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து படித்தவன். அப்படி இருந்த என்னை, நான் எந்த ஜாதி, பணக்காரனா, ஏழையா என்றெல்லாம் பார்க்காமல், என்னை தத்தெடுத்த பிள்ளையாக வளர்த்து, 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினராக உட்கார வைத்து, பத்து, பதினைந்து ஆண்டுக்காலம் அமைச்சராகப் பணிபுரிய வாய்ப்பளித்து, தன் பிள்ளைகளைவிட எனக்கு முக்கியமான சலுகைகளைக் கொடுத்து, “துரை, துரை” என்று கடைசி வரையில் என்னை அழைத்தவர் தலைவர் அவர்கள்.*

*எனக்கு ஒரே ஒரு ஆசை இருந்தது. அந்த ஆசை 2007-ல் நிறைவேறியிருக்கவேண்டும். மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்களுக்குத் தெரியும். ஒருவனுக்கு அப்பா, அம்மா அவர்கள் ஒரு முறைதான் உயிர் கொடுப்பார்கள்.*

ஆனால், என் தலைவர் எனக்கு அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து எனக்கு இரண்டாவது முறை உயிர் கொடுத்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுவை சிகிச்சைக்கு முதல் நாள் இரவு, அறுவை சிகிச்சை முடிந்து நல்ல முறையில் வருவேனா, வரமாட்டேனா என்று நடுங்கிய நிலையில் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தேன். 10-00 மணிக்கு அவர் எனக்கு போன் செய்கிறார்.' துரை, நீ தூங்கிவிட்டாயா?' என்று கேட்டார். நான் 'இல்லை' என்றேன். 'காலையிலே ஆபரேசன்; பயப்படுகிறாயா' என்று கேட்டார். 'இல்லை' என்று சொன்னேன். 'எனக்குத் தெரியும்டா, நீ கோழை; நீ பயப்படாமல் இரு. நான் வந்து, உன்னுடைய அறையிலே, உன்னோடு, இரவு தங்கிவிட்டு, காலையில் உன்னை ஆபரேசன் தியேட்டருக்கு அனுப்பிவிட்டு வருகிறேன், துரை' என்று சொல்லிவிட்டு அவர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார். அதற்குப் பிறகு அங்கு வந்த அவரை நான் வழியனுப்பி வைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து'

தன்னுடைய தலைவர், தனது பிணத்தின்மீது ஒரு சொட்டு கண்ணீர் விட்டால், அதுதான் அவன் பெற்ற பேறு என்பதைப்போல், 2007 ஆம் ஆண்டிலேயே அறுவை சிகிச்சையின்போது நான் மடிந்திருந்தால், என் தலைவர் என் உடல்மீது ஒரு சொட்டு கண்ணீர் விட்டிருப்பார். ஆனால், துரதிருஷ்டம் என்னுடைய தலைவருடைய சவத்தின்மீது நான் கண்ணீர் சிந்துகின்ற ஒரு துர்பாக்கியத்தைப் பெற்றேன்.

(திரு. துரைமுருகன் அவர்கள் மேலும் உரையாற்ற இயலாமல் சிறிது நேரம் கண்ணீர் மல்க அமர்ந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தலைவருக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களுக்கும், இங்கு தாங்கள் படித்த, மறைந்த அப்பெரியவர்களுக்கும், எங்கள் கட்சியின் சார்பில், என் தலைவர் தளபதியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2019 ஜனவரி 3]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பன்னிரெண்டு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்திய அளவிலே மிகப் பெரிய தலைவர்கள் ஏழு பேர் இறந்திருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றத்தில் அவர்களுக்கெல்லாம் இரங்கல் தெரிவித்திருக்கிறோம். அவர்களது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்.*

*முற்பகல் 10-55*

*காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடன் வாழ்ந்து, நம்முடன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் மரியாதைக்குரிய திரு. போஸ் அவர்கள். அவர் ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டு, அந்தப் பகுதிக்கு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவரை இழந்து வாடுகின்ற அந்தக் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்திருந்த கட்சியினருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அடுத்தபடியாக, தமிழகத்திலே மிகப் பெரிய தலைவராக இருந்த கலைஞர் அவர்கள் மறைந்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் தமிழகத்திலே 5 முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய அரசியல் பயணத்தை அநேகமாக திருச்சிக்கு அருகிலே குளித்தலை என்ற தொகுதியிலே, ஆரம்பத்திலே சட்டமன்ற உறுப்பினராக ஆரம்பித்தார்கள். தன்னுடைய சொந்த ஊரிலே, திருவாரூரிலே பணியை நிறைவு செய்திருக்கிறார்கள்.இவர்கள் மக்களுக்காக பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்.*

*குறிப்பாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு இவர்கள் தொடர்ந்து உதவியாக இருந்திருக்கிறார்கள். இந்தியாவிலே பிராந்தியக் கட்சிகள் அமைப்பை பொறுத்தமட்டில் அதற்கென்று ஒரு தனி அந்தஸ்தைப் பெற்றுத் தந்தவர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் தமிழகத்திலே பல மாறுதல்களை, பல நல்ல காரியங்களை தொடர்ந்து செய்து வந்திருக்கிறார். அவர் 5 முறை முதலமைச்சராக*

இருந்தபொழுது நான் 3 முறை சட்டமன்ற உறுப்பினராக இங்கே பணியாற்றியிருக்கிறேன்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை விவசாயிகள் போராட்டம் காரணமாக, எங்கள் எல்லோரையும் திருச்சி ஜெயிலிலே அடைத்திருந்தார்கள். மறு நாள் சட்டமன்றம் கூடுகிறது. முதல் நாள், அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் உடனடியாக சட்டமன்றக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஓர் உத்தரவைப் போட்டு அழைத்தார்கள். அங்கே இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள். இதில் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. கலைஞர் எல்லா விவசாயிகளையும் அடைத்து வைத்துவிட்டு, நம்மை சட்டமன்றத்திற்கு அழைக்கிறாரே, என்ன செய்வது என்று புரியாமல் சட்டமன்றத்திற்கு வந்தோம். வந்தவுடன், அவர்கள் எழுந்து பேசுவதற்கு முன்பாக, 'நீங்கள் எங்களது விவசாயிகளையெல்லாம் உள்ளே வைத்துவிட்டு, எங்களை இங்கே அழைத்திருக்கிறீர்கள், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்' என்று கேட்டோம். கேட்டபொழுது ஒரே சத்தமாக இருந்தது. 'நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

முற்பகல் 11-00

எங்கள் விவசாயிகள் அனைவரையும் வெளியில் விட வேண்டும் என்று சொன்னோம். நாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. விவசாயிகளை இப்பொழுதே விடுகிறேன், அதற்கான உத்தரவினைப் பிறப்பிக்கிறேன் என்று சொன்னார்கள். எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இது போன்று அவரின் கூர்மையான திறமை மிகப் பெரிய பலமாக அவருக்கு இருந்தது.

குறிப்பாக, அவர்கள் தமிழக விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கினார்கள்; எல்லா மதத்தினரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று கருதி, சமத்துவபுரத்தை அமைத்தார்கள்; அதேபோல் சமத்துவ சுடுகாடுகளை அமைத்தார்கள்; உழவர் சந்தைகளை அமைத்தார்கள்; இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள்; இலவசமாக எரிவாயு இணைப்புகளை வழங்கினார்கள்; பெண்களுக்கு சொத்திலே பங்குண்டு என்பதை அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

அதேபோல் காமராஜ் அவர்களுடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார்கள்; மாணவர்களுக்கு இலவச bus

pass *வழங்கினார்கள்; சத்துணவில் வாரத்திற்கு 5 முட்டைகள் குழந்தைகளுக்கு வழங்குவதற்கான உத்தரவினைப் பிறப்பித்தார்கள்; அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை நிறுவினார். அது மிகப் பெரிய நூலகமாகும். இந்த நூலகத்தை திறப்பதற்கு கலைஞர் அவர்கள்தான் ஏற்பாடுகளைச் செய்தார். மெட்ரோ இரயில் திட்டம் வருவதற்கு முழு காரணமாக இருந்தவர் கலைஞர்.*

*பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வந்தன. குறிப்பாக, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கலைஞர் அவர்கள் காலத்திலேதான் கொண்டு வரப்பட்டது. கலைஞர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அப்பொழுது இருந்த காங்கிரஸ் அரசு 'தமிழை செம்மொழியாக' அறிவித்தது. அந்தத் தகவலை கலைஞர் அவர்களிடம் தெரிவிப்பதற்காக அன்னை சோனியா காந்தி அவர்கள் கலைஞருக்கு ஒரு கடிதத்தை எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தை நான் கடைசி வரையில் என்கூடவே வைத்திருப்பேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.*

*அதற்கு அடுத்தாற்போல், செம்மொழிப் பூங்காவை அமைத்துக் கொடுத்தது கலைஞர்தான். இந்தியாவிலேயே அந்தந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய முதலமைச்சர்கள் சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர்தான். இப்போது பேசும்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள்.*

*கலைஞர் அவர்கள் 13 தடவைகள் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார்கள். 13 தடவைகளும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இருந்திருந்தால் தொடர்ந்து தமிழகம் முன்னேறுவதற்கு நிச்சயமாக உறுதுணையாக இருந்திருப்பார். அவர் இப்போது மறைந்து விட்டார்; இது தமிழகத்திற்கு ஒரு பேரிழப்பு ஆகும். அவருடைய குடும்பத்தாருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அன்பிற்குரிய சகோதரர்களுக்கும், பெரியவர்களுக்கும், குறிப்பாக, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தாங்களும், அவை முன்னவர் அவர்களும் முன்மொழிந்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானத்தின்மீது பேசக்கூடிய வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2019 ஜனவரி 3 முற்பகல் 11-05

12 சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கற்குறிப்புகள் வாசிக்கப்பட்டன. அதில் ஒருவரான திரு. சை. நாகூர்மீரான் அவர்கள் நான் தற்போது சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர். அதேபோன்று, முன்னாள் பிரதமர் மற்றும் முன்னாள் ஆளுநர் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் 6 பேருக்கும் மற்றும் கஜா புயலால் உயிரிழந்தவர்கள் குறித்தும் இங்கே இரங்கல் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

15-வது சட்டமன்றப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றிய சகோதரர் திரு. ஏ.கே. போஸ் அவர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தின் ஆளுமைமிக்க தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய மறைவிற்கு, மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தின்மீது உரையாற்றிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அனைவருக்கும் கண்ணீர் வரக்கூடிய வகையிலே மிக உருக்கமாக பல்வேறு செய்திகளை இங்கே எடுத்துச்சொல்லி, அனைவரையும் கண்ணீர் வெள்ளத்திலே ஆழ்த்தியிருக்கிறார். அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் உரையாற்றினார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு பெயரையும், புகழையும் சேர்த்து, நிலைத்து நின்று, இமயமலைபோல் திகழ்ந்தவர். அவரின் மறைவு, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு ஈடு செய்ய முடியாத அளவிற்கு பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழக வரலாற்றில் 80 ஆண்டுகளுக்கும் மேலாக முதலிடத்தில் வைத்து போற்றப்பட்ட மக்கள் தலைவராகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். தமிழ் மொழியின் சுரங்கமாகவும், தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், செம்மொழித் தமிழ் இலக்கிய ஊற்றாகவும், தென்தமிழ் நெறியின் உறைவிடமாகவும் மானிட வரலாற்றுச் சுவையாகவும் வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள். மக்கள்

*2019 ஜனவரி 3]* [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

*சேவையில் அரசு நிருவாகத்திலும், சட்டங்கள் இயற்றுவதிலும் பல சீர்திருத்தங்களையும், புரட்சிகரமான திட்டங்களையும் தேசிய அளவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் கொண்டு வந்து, போற்றக்கூடிய தத்துவங்களையும் வெளியிட்டு, ஒளி சிந்தும் ஒய்வறியா ஞான சூரியனாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். எல்லா சமுதாய மக்களின் அன்பராகத் திகழ்ந்த கலைஞர் அவர்கள், தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் நண்பராகவும், இதய நாயகராகவும் போற்றப்பட்டவர்.*

*கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, வர்த்தகம், தொழில் முன்னேற்றம், ஏழையெளிய நடுத்தர வர்க்க மக்களின் வாழ்வுக்கான ஆதாரமாகிய அனைத்துத் துறைகளிலும் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கித் தந்து, சமுதாய உயர்வுக்கு உதவிய பேருபகாரியாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வு, நம்பிக்கை, நடைமுறை, பழக்கவழக்கம், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றை தெளிவாகப் புரிந்து, சிறப்பாக மதித்து, பாராட்டக்கூடிய வகையில் பாதுகாத்துத் தந்து, நானிலம் போற்றும் நல்லிணக்க நாயகனாக விளங்கியவர் கலைஞர் அவர்கள்.*

*கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் காலந்தொட்டு முஸ்லிம் சமுதாயத்தோடும், எங்கள் இயக்கம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியோடும் 1962 ஆம் ஆண்டு முதல் 57 ஆண்டுக்கால வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கும் உறவினையும், அன்பையும், நேசத்தையும் வளர்த்தவர் கலைஞர் அவர்கள் என்பதை நன்றியுணர்வோடு இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றோம். காயிதே மில்லத் அவர்களோடு தொடங்கிய தொடர்பினால் என்னைப் போன்ற ஏழை எளியவரும் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராகி, சட்டமன்றத்திற்கு வந்து அமர்வதற்கும், அவர் வாழ்ந்த காலத்தில் நாங்களும் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றினோம் என்று சொல்லும் அளவிற்கு ஓர் அரிய வாய்ப்பினையும் நாங்கள் எல்லோரும் பெற்றோம்.*

*நான் மாணவரணித் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது, 1992 ஆம் ஆண்டு எங்களுடைய மறைந்த தலைவர் சிராஜுல் மில்லத் அப்துல் ஸமது சாஹிப் அவர்களோடு, நெய்வேலியில் தலைவர் கலைஞர் அவர்களை முதன்முறையாகச் சந்திக்கக்கூடிய ஓர் அற்புதமான பாக்கியத்தைப் பெற்றேன். அதன் பிறகு, நடப்பு 15-வது சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக*

பதவியேற்கும் நாளன்று, இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் யாராலும் பெறமுடியாத ஒரு பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது என்னவென்றால், நான் சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்கும்போது அன்றைய முதலமைச்சர் அம்மையார் அவர்களும் அவையில் இருந்தார்; மறைந்த தலைவர் கலைஞர் அவர்களும் அந்த நேரத்திலே அவையில் இருந்தார்.

*முற்பகல் 11-10*

இரண்டு பேரும் இருக்கக்கூடிய ஒரே நேரத்தில் பதவி ஏற்கக்கூடிய பாக்கியத்தை நான் ஒருவன் மட்டுமே பெற்றேன். முதல்வர் அவர்கள் இருந்தார்கள்; கலைஞர் அவர்கள் வந்த பிறகு அம்மையார் அவர்கள் சென்றுவிட்டார்கள். இரண்டு பேரும் இருக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பினை நான் பெற்றேன் என்பதையும் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை, முஸ்லிம் சமுதாயத்திற்காக எண்ணற்ற நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக, வேலை, கல்வியிலே நல்ல நிலையை அடைய வேண்டுமென்பதற்காக, 15-9-2007 அன்று அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா துவக்கத்தில் ரமலானுடைய பரிசாக முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகித தனி இட ஒதுக்கீடு வழங்கியவரும் கலைஞர் அவர்கள்தான். அதேபோல, கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் முஸ்லிம் சமுதாயத்திலிருந்து துணை வேந்தர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். 1990 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக திரு. சாதிகு அவர்களும், 1996 ஆம் ஆண்டு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக வந்தவாசி திரு. அப்துல் கரீம் அவர்களும், 1998 ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இராமநாதபுரத்தைச் சேர்ந்த திரு. சாதிக் அவர்களும், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு M.G.R. பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக டாக்டர் மீர் முஸ்தபா ஹுசேன் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இப்படி முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் துணை வேந்தராக ஆவதற்கு மிகப் பெரிய பணியாற்றி, வழிகாட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இங்கே நன்றியுணர்வோடு குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம்.

*2019 ஜனவரி 3]* [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

*கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்; முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான இடவசதி இல்லாதிருந்த நிலையில், அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் பாளையங்கோட்டையில் இருக்கக்கூடிய சதகத்துல்லா அப்பா கல்லூரிக்கு 30 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சென்னை மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரி எனப் பல்வேறு கல்லூரிகளுக்கு அவர் நிலங்களை வழங்கி, முஸ்லிம் சமுதாய மக்களின் கல்விக்காக மிகப் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். திராவிட நெறியும், இஸ்லாமிய வாழ்க்கை நெறியும் இணைந்து செல்லும் பல்வேறு கூறுகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, போற்றி வளர்த்து வந்த கலைஞர் அவர்களின் மறைவு, தமிழ் சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கலைஞர் அவர்கள் உடலளவில் மறைந்திருந்தாலும் மக்களின் உள்ளத்தில் என்றும் மறையாமல் இருக்கின்றார். அவருடைய இலட்சியங்கள், அவர் போதித்த தத்துவங்கள், அவர் காட்டிய அரசியல் பயணப் பாதைகள் என்றும் மறையாமல் இருக்கின்றன. கலைஞர் அவர்கள் சென்று, வென்று, வரலாறு படைத்த பாதையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இன்றைய ஒப்பற்ற தலைவர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய தலைமையில் அக்கழகம் பல்வேறு வெற்றிகளைப் பெற்று வெல்லும்; வருங்காலத்தில் வரலாறு படைக்கும் என்பதில் எந்த அச்சமும் இல்லை. அதற்கு என்றும்போல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணை நிற்கும் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பிலும், எங்களுடைய தேசியத் தலைவர் பேராசிரியர் திரு. காதர் மொய்தீன் அவர்களின் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் அவர் பெயரிலான சிறப்புக்குரிய திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்பதையும் வேண்டுகோளாக வைத்து, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை இங்கே பதிவு செய்கின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

**திரு. உ. தனியரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றப் பேரவையில் பல்வேறு*

காலக்கட்டங்களில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, மறைந்திருக்கிற 12 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரங்கற்குறிப்பு வாசிக்கப்பட்டது.

தேசம் தழுவிய அளவிலே தாம் சார்ந்த துறைகளில் மிகச்சிறந்த பணியாற்றி, தேசத்து மக்களினுடைய பேரன்பைப் பெற்று, மக்கள் சேவையாற்றி ஆளுமையோடு விளங்கி மறைந்த பெரும் தலைவர்களான 7 தலைவர்களுக்கு தாங்கள் கொண்டு வந்து முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தை நானும் வழிமொழிகிறேன்.

15-வது சட்டமன்றப் பேரவையில் நம்மோடு மிக இனிமையாகப் பழகி, 3 முறை தொகுதி மக்களின் அன்பைப் பெற்றதோடு மட்டுமல்லாமல், தான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விசுவாசமாக விளங்கி, தன்னைக் கொண்டு வந்த தலைமையை, குறிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களை உயிருக்கு உயிராக நேசித்த பண்பாளர், மிகச் சிறப்பாக மக்கள் பணியில் ஈடுபட்ட சட்டமன்ற உறுப்பினர் ஆருயிர் அண்ணன் திரு. ஏ.கே. போஸ் அவர்களுடைய மறைவு அதிர்ச்சிக்குரியது, வேதனைக்குரியது.

முற்பகல் 11-15

அதேபோன்று, நம்முடைய தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத வரலாற்று சக்தியாக விளங்கியவர் கலைஞர் அவர்கள். தாய்த் தமிழ்நாட்டில் எங்கோ ஒரு கிராமத்திலே எளிய சமுதாயத்திலே மிகச் சாதாரண எளிய குடும்பத்திலே, குடிசையிலே, பிறந்த அவரை, யாரும் கையைப்பற்றி அரசியலுக்கு அழைத்து வரவில்லை. இயற்கை தமிழ்த் தாய் அவரை மாணவப் பருவத்திலேயே அரசியலுக்கு அனுப்பி வைத்தது; அவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் பள்ளிப் பருவத்திலேயே சமூக அரசியலின்மீது இயல்பான பற்றுகொண்டு, தான் பேசும் தமிழ் என்னும் தாய்மொழியை நுகர்ந்து நுகர்ந்து சுவைத்து, தாய்ப் பாலூட்டி வளர்க்கப்பட்டாரோ, இல்லையோ, தமிழ் பால் குடித்து வளர்ந்த மிகச் சிறந்த தமிழ் மொழிப் பற்றாளர். மிகக் கடுமையான போட்டிகளுக்கு மத்தியிலே கலைத் துறையில் செழித்து வளர்ந்து தலைமை நிலையை அடைந்த ஒரு தலைவர், கலைஞர் அவர்கள்.

கலையை வளர்க்கின்றபொழுதே, கலையினூடாக சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த மூடப் பழக்கவழக்கங்களிலிருந்து மக்களை மீட்க முயற்சித்தார். சமுதாயத்தில் மக்களாட்சி தத்துவத்தை, குடியாட்சி பண்புகளை, அடிமை இந்தியாவிலும், சுதந்திர

*2019 ஜனவரி 3]* [திரு. உ. தனியரசு]

*இந்தியாவிலும், அறியாமையிலிருந்த, வறிய நிலையிலிருந்த தேசத்து மக்களுக்கு தன்னுடைய ஆற்றலால், கலைவழியே சமூக அரசியலில் விழிப்புணர்வை ஊட்டிய தலைவர், கலைஞர் அவர்கள். அவர் அரசியலில், மேடையிலே பேசுகிறார், கலைத்துறை நாடகத்திலே பேசுகிறார், திரைத் துறையிலும் பேசுகிறார், எழுதுகிறார். தன்னுடைய கைப்பிரதிகளை, தெருத் தெருவாக, நடந்து, வீடு வீடாகச் சென்று சக மாணவர்களிடத்திலே வழங்குகிறார். அவர் மிதிவண்டியிலே செல்கிறார். தலைவரான பிறகும்கூட குதிரை வண்டியிலே, மாட்டு வண்டியிலே கிராமம் கிராமமாகச் செல்கிறார். தன்னுடைய கருத்தைப் பரப்புகிறார். அந்தக் கருத்தைப் பரப்புவதற்கு செயல்படுகிறார். அவரே சுவரொட்டி ஒட்டுகிறார். கடுமையான நெருக்கடியிலே அவர் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார். தந்தை பெரியாரின் கரம் பற்றுகிறார். குடியரசிலே பணியாற்றுகிறார். பல்வேறு ஒடுக்கப்பட்ட சாதாரண மக்களின் மாண்புக்கு மிக வலிமையான அடையாளம் டாக்டர் கலைஞர்.*

*குடிசையிலே எளிய சமுதாயத்திலே பிறந்து, உலகத்தை ஆளும் ஆதிக்கம் படைத்த வெள்ளையர் கட்டிய நம்முடைய இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையை தன்னாலும் ஆள முடியும் என்ற நம்பிக்கையை உலகத்தினுடைய கடைசி மனிதனுக்கும் விதைத்த மகத்தான அரசியல் ஆற்றலாளர், தலைவர் கலைஞர். இந்தக் கோட்டையிலே, வெள்ளையர் கட்டிய இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே, நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே 13 முறை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 5 முறை முதல்வராகவும் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்திய தேசத்தை, செங்கோட்டையிலே யார் ஆள வேண்டும் என்கிற முடிவெடுக்கிற அதிகார இடத்திலே இருந்து இந்திய மக்கள் சமூகத்தின் பங்கை, ஜனநாயகத்தின் பங்கை ஆற்றியவர். நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் தேசிய அவசர நிலையில் தமிழ்நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பதற்கு ஆட்சியை இழந்தார். அதற்காக அவர் பட்ட துன்பம், துயரம் நம் எல்லோருக்கும் தெரியும். இது ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கான வரலாறு. நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வரலாறு என்றும், திராவிட முன்னேற்றக் கழக வரலாறு என்றும் பிரித்துப் பார்க்கவில்லை. ஒரு தாயின் குழந்தைகளைப்போல புரட்சித் தலைவரும், டாக்டர் கலைஞரும், அவர்களுடைய அந்தப் பரிணாமத்திலிருந்து அரசியலை*

[திரு. உ. தனியரசு] [2019 ஜனவரி 3

உள்வாங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களும் கட்டிக்காத்த தாய்த் தமிழ் சமூகத்தினுடைய தேசம்தான் இந்தத் தமிழ் தேசம். இந்திய மாநிலங்களிலேயே தமிழகம் பல்வேறு துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக சிறந்து விளங்குவதற்கு அந்த ஆற்றல்மிக்க தலைவரின் அளப்பரிய பங்கு, நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே, அரசியலிலே நிலைத்து நிற்கிறது. இந்த நிலையிலே, அவருடைய பல்வேறு திட்டங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா அவர்கள் மிக நெகிழ்ச்சியோடு பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். மேலும், அந்தத் தலைவரோடு மிக நெருக்கமாகப் பழகிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஐயா துரைமுருகன் அவர்கள் அவரைப் பற்றிக் குறிப்பிட்டபோது, தாளமுடியாத அளவிற்கு அழுதார். இந்த அவையில் உள்ளவர்களைக் கண்கலங்க வைத்தார். தன்னுடைய தலைவனை நேசிக்கிற இந்தப் பாங்கு, என் மனதை நெகிழ்ச்சியடையச் செய்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைந்தபோது கோடிக்கணக்கான தொண்டர்கள் பாசம் காட்டி, அழுது கதறினோம்.

முற்பகல் 11-20

அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர், 'என் உயிரினும் மேலான உடன்பிறப்பே' என்று அழைப்பதை மறக்க முடியாத எத்தனையோ உடன்பிறப்புகளில் மூத்த உடன் பிறப்பான அண்ணன் துரைமுருகன் அவர்கள், நமது சட்டமன்ற வரலாற்றிலேயே, தலைவருடைய நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் அரசியல் கலப்பு இல்லாமல் இன்றைக்கு உருக்கமாகப் பேசினார்கள். சார்பு நிலையில்லாமல் தலைவர் குறித்தும் அவருடைய ஆளுமையைப் பற்றியும், வரலாற்றுச் சிறப்பைப் பற்றியும் பேசினார். அவர் சுட்டிக்காட்டியதைப்போன்று, தலைவர் கலைஞர் நிறைவேற்றிய திட்டங்களிலே பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, விவசாயிகளுக்கு கட்டணமில்லா மின்சாரம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற சட்டத்தைக் கொண்டு வந்தது; ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை. வன்னியர் சமூகம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைக்க சட்டம்

*2019 ஜனவரி 3]* [திரு. உ. தனியரசு]

*கொண்டு வந்தது; கொங்கு வேளாளர் சமூகத்தை முற்பட்டோர் பட்டியலிலிருந்து பிற்பட்ட சமூகமாக அறிவித்தது; இஸ்லாமிய உறவுகளுக்கு உள் ஒதுக்கீடு, அருந்ததிய சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு உள்ளிட்ட எத்தனையோ சமூக நலன்களுக்கான சட்டங்களைக் கொண்டுவந்த தலைவர், அரசியல் உரிமைகளுக்காகக் கொண்டு வந்த தலைவர், டாக்டர் கலைஞர், நம்மிடத்திலே இல்லை. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழ்ச் சமூகத்தினுடைய வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான ஆளுமையாகத் திகழ்ந்து, நமக்கெல்லாம் வழிகாட்டியவர் தலைவர் கலைஞர். மேடைகளிலே அரசியல் மட்டும் பேசாத திராவிட மேடைதான் தமிழ்ச் சமூகத்திற்கு அரசியலை ஊட்டியது; ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் வரலாற்றைப் போதித்தது; சமூக மூடச் சடங்குகளிலிருந்து, பிற்போக்குத்தனத்திலிருந்து மக்களுக்கு பகுத்தறிவூட்டி வளர்த்த சமூகம், நம்முடைய தமிழ்ச் சமூகம்; திராவிடச் சமூக இயக்கத்தினுடைய முதன்மையான தலைவர் டாக்டர் கலைஞருடைய மறைவு மிகுந்த வருத்தத்திற்குரியது, வேதனைக்குரியது. அதற்கு எங்களுடைய அனுதாபத்தை, இரங்கலை, 'உயிரினும் மேலான உடன்பிறப்பே' என்று அழைக்கப்படக்கூடிய கோடிக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உடன்பிறப்புகளுக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவையில் இருக்கிற நம்முடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியமாக பேரவைத் தலைவர் ஐயா உள்ளிட்ட அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிற, குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்த இரங்கல் தீர்மானத்தை நான் மிகுந்த வேதனையோடு, துன்பத்தோடு, நம்மையெல்லாம் விட்டு மறைந்த ஆளுமைகளுக்கு என்னுடைய இரங்கலைப் பதிவு செய்து, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இதற்கு முன்பாக சிறப்பாகப் பணியாற்றிய 12 உறுப்பினர்கள் நம்மிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுச் சென்றிருக்கிறார்கள். அதுபோன்று இந்திய*

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2019 ஜனவரி 3*

*அளவிலும், தமிழக அளவிலும் பல்வேறு அரசியல் ஆளுமைகளாக, மக்கள் சேவகர்களாகத் திகழ்ந்தவர்கள் நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்திலே எங்களுடைய மனமார்ந்த இரங்கலை, உள்ளார்ந்த உணர்வுகளோடு தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அதுபோன்று, 2018 ஆம் ஆண்டு 'கஜா' புயலால் உயிரிழந்தவர்களுக்கும் இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறீர்கள். 'கஜா' புயல் எங்களுடைய புன்னகையைப் பறித்துச் சென்றிருக்கிறது; எங்களுடைய வாழ்க்கையைச் சூறையாடிச் சென்றிருக்கிறது. அதிலே உயிரிழந்தவர்களுக்கும், அதன் பின்னாலே, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளிலே சிறப்பாகப் பணியாற்றி, அதன் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும் இங்கே நம்முடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*இதே சட்டமன்றத்தில் நம்மோடு பணியாற்றிய மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்கிறார்கள். அவருக்காகவும் நம்முடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதோடு, இந்திய அளவிலே தமிழர்களுடைய அரசியல் ஆளுமையை வெளிப்படுத்திய, திராவிட இயக்கத்தினுடைய தன்னிகரற்ற தலைவராக நம்முடைய காலத்திலே திகழ்ந்த, முன்னாள் முதல்வர், மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து, எல்லோரும் உருக்கமாக உரையாற்றிக் கொண்டிருக்கின்றோம். பல பேர் அவர் திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று நினைக்கிறார்கள். உண்மையில் அவருடைய திருக்குவளை கிராமம், நாகப்பட்டினம் மாவட்ட எல்லையில்தான் அமைந்திருக்கிறது. என்னுடைய சொந்த ஊரான தோப்புத்துறையிலே பல நாட்கள் கலைஞர் அவர்கள் தங்கியிருந்திருக்கிறார்கள். அதை 'நெஞ்சுக்கு நீதி'யிலும் பதிவு செய்திருக்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய பொது வாழ்வு என்பது திருவாரூரிலே நடைபெற்ற ஒரு மீலாது மாநாட்டிலிருந்து தொடங்குகிறது. அங்குதான் பேரறிஞர் அண்ணா அவர்களும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்தார்கள்.*

*முற்பகல் 11-25*

*அந்த மாநாட்டிலே ஒரு கையில் குடியரசு ஏட்டையும், இன்னொரு கையிலே தாருல் இஸ்லாம் ஏட்டையும் சுமந்து*

*2019 ஜனவரி 3]* [திரு. எம். தமிமுன் அன்சாரி]

கொண்டு, கூவி, கூவி அந்த இளம் வயதிலே தன்னுடைய கொள்கைப் பிரசாரத்தை முன்னெடுத்தவர் ஐயா கலைஞர் அவர்கள்.பின்னாளிலே பெரியாருடைய பேரன்பினைப் பெற்று, குடியரசு ஏட்டிலே அவர் எழுதிய கட்டுரைகள் திராவிட இயக்கப் பயணத்திலே பல திருப்புமுனைகளை ஏற்படுத்தின.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோட்டிலே நானும் அவரும் ஒரே மேடையிலே கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நேரத்திலே ஈரோடு என்று சொன்னவுடன், பெரியாருடைய நினைவுகள் அவருடைய மனதிலே பொங்குகின்றன. அந்த நேரத்திலே முதன்முதலாக குடியரசு ஏட்டிலே அவர் எழுதிய கவிதையை அந்தத் தள்ளாத வயதிலும் நினைவாற்றலோடு ஒரு வார்த்தைகூட பிசகாமல் ஏறத்தாழ 10 நிமிடங்கள் அந்த மேடையிலே எந்தக் குறிப்புகளுமின்றி வாசிக்கிறார். அது அவருடைய நினைவாற்றலை வெளிப்படுத்துவதாக அமைந்து, எங்களைப் போன்றவர்களுக்கு மிகப்பெரிய ஊக்கச் சக்தியாக இருந்தது.

அதுமட்டுமல்ல, அவருடைய எழுத்துநடை தமிழ்ச் சமூகத்திலே ஒரு புதிய பாதையைத் தொடங்கியது. பராசக்தி படத்தைப் பற்றி நாம் எல்லோருமே பேசியிருக்கின்றோம். ஒரு முழு திரைப்படத்தையும் 4½ நிமிட வசனத்தின் வாயிலாக நிறைவு செய்து, முழு திரைப்படத்தையும் 4½ நிமிடங்களில் கொண்டுவந்து நிறுத்திய ஒரு சாதனை கலைஞருக்குச் சொந்தமானது.

அதுமட்டுமல்ல, அவருடைய ஒவ்வொரு எழுத்திலும் ஒரு சிலேடை இருந்தது. முரசொலியிலே அவருடைய கடிதங்களைப் படிப்பதற்காக உடன்பிறப்புகள் மட்டுமல்ல, மாற்றுக் கட்சியினரும் காத்திருப்பார்கள் என்ற நிலை இருந்தது. அவர் எதுகைமோனையில் என்ன சொல்ல வருகிறார், கவிதையில் என்ன சொல்ல வருகிறார், கேள்வி-பதிலில் என்ன சொல்ல வருகிறார் என்று தமிழ்ச் சமூகம் காத்திருந்ததை நாமெல்லாம் உணர முடிந்தது உச்சகட்டமாக அவருடைய திறமையை வெளிப்படுத்தக்கூடிய பல காரியங்களை முரசொலி பத்திரிகை வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம்.

எமர்ஜென்சி காலகட்டத்திலே யார், யார் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது தெரியாமல் இருந்த நேரத்திலே வெளிப்படுத்தினாலும் குற்றம் என்ற ஒரு சூழ்நிலையில் அண்ணா சமாதிக்கு அஞ்சலி செலுத்த வராதவர்களுடைய பட்டியல் என்று கூறி, இவர்கள் எல்லோரும் வெளியிலே இல்லை;

எமர்ஜென்சியின் காரணமாக சிறையிலே இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்திய அவருடைய சாதுரியம் என்பது சாதாரண விஷயம் அல்ல.

கடந்த 50 ஆண்டுகளிலே பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் அவர்தான் அதிகமாக தலைப்புச் செய்தியில் இடம் பெற்றிருப்பார் அல்லது முதல் பக்கத்திலே இடம் பெற்றிருப்பார் என்பது உண்மை. அவருடைய இலக்கியத்தைக் கண்டு நானும், எல்லோரும் வியந்திருக்கின்றோம். 74 வயது அல்லது 75 வயது அவருக்கு இருக்கின்றபொழுது ஜுனியர் விகடனில் காதல் படிக்கட்டுகள் என்ற பெயரில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் என்று எல்லோரும் தங்களுடைய இளம் வயது காதல் அனுபவங்களை எழுதுகிறார்கள். அந்த 70 வயதைக் கடந்த நிலையிலும் கலைஞர் எழுதுகிறார், தன்னுடைய இளமைக் காலத்திலே; தான் நேசித்த ஒரு பெண்ணுடைய கூந்தலைப் பற்றி அழகான வார்த்தைகளில் எழுதி, பதிவு செய்கிறார். “அவளின் கூந்தல் ஓரணா நாணயத்தின் விளிம்பு போல இருந்தது.” ஒரு பெண்ணின் தலையில் இருக்கும் சுருள் முடியை நாகரிகமான வார்த்தைகளிலே கலைஞர் அவர்கள், 70 வயதைத் தாண்டிய பிறகு, அதை ஜுனியர் விகடனில் பதிவு செய்ததைப் படித்தபொழுது, இவருடைய இலக்கிய ஊற்று என்பது சாதாரணமானது அல்ல என்று எங்களைப் போன்றவர்களை வியக்க வைத்தது.

ஏ.ஆர். ரகுமானின் இசைக்கு வாலியும், வைரமுத்துவும் தான் ஈடு கொடுக்க முடியும் என்ற ஒரு நிலை இருந்தது. ஆனால், ‘செம்மொழியான தமிழ்மொழியாம்’ என்ற ஒரு பாடலை எழுதி வைரமுத்துவையும், வாலியையும் தாண்டி, என்னால் ஏ.ஆர். ரகுமானுக்கும் இளைய தலைமுறை இசைக் கலைஞர்களுக்கும் ஈடுகொடுக்க முடியும் என்பதை களத்திலே உணர்த்தியவர், நம்முடைய கலைஞர்.

அதுமட்டுமல்ல, அவருடைய நகைச்சுவை உணர்வு என்பது அபாரமானது. ஒருமுறை கவிஞர் கண்ணதாசன் அவர்கள் வெளிநாடு செல்கின்றபோது கலைஞரைப் பார்த்து, “உனக்கு நான் என்ன வாங்கி வர வேண்டும் நண்பா?” என்று கேட்கிறார்கள். திரும்ப கலைஞர் சொல்கிறார்; “நல்ல பெயரை வாங்கி வா” என்று சொல்கிறார். ஒருமுறை கண்ணதாசன் அவர்கள் தொலைபேசியிலே கலைஞரோடு பேசுகின்றபொழுது, ‘நான் பாண்டிச்சேரியில் நிற்கலாம் என்று விரும்புகிறேன்’ என

*2019 ஜனவரி 3]* [திரு. எம். தமிமுன் அன்சாரி]

சொன்னபோது, "ஐயா, உன்னால் பாண்டிச்சேரியில் நிற்க முடியாது" என்று சிலேடையாகப் பதில் சொல்லி, தன் நண்பரை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார்.

ஒருமுறை அவருடைய சிலை உடைக்கப்பட்டது. தி.மு.க. தொண்டர்கள் பதற்றம் அடைகிறார்கள். அந்தப் பதற்றத்தைத் தணிக்கும் விதத்திலே அந்த சிலை உடைப்பைக்கூட நகைச்சுவையாக மாற்றுகிறார். "நல்லவேளை அந்த சின்னத் தம்பி என் முதுகிலே குத்தவில்லை, என் நெஞ்சிலே குத்தினான்" என்று சொல்லி, தொண்டர்களுடைய பதற்றத்தை நகைச்சுவையாக மாற்றிய அவருடைய திறமை என்பது சாதாரண விஷயமல்ல.

கலைஞர் அவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலே நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் அண்ணன் தனியரசு அவர்களும், அண்ணன் கருணாஸ் அவர்களும் அவருடைய வீட்டிற்குச் சென்று பார்த்தோம். ஒரு குழந்தையைப் போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். தள்ளப்பட்டிருந்த காட்சியைப் பார்த்து நாங்கள் உருகிவிட்டோம். அன்று மாலை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அவருடைய இல்லத்திலே சந்தித்தபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் துரைமுருகன் அவர்களும் இருந்தார். அப்போதுதான் நான் சொன்னேன், கலைஞர் அவர்களுடைய இரங்கல் அறிக்கைகளை நீங்கள் தொடர்ந்து வாசித்தால், பல வரலாறுகள் அதில் புதைந்து கிடக்கின்றன. அந்த இரங்கல் அறிக்கைகளை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். ஏனென்று சொன்னால், கலைஞர் அவர்களுடைய ஒவ்வோர் இரங்கல் அறிக்கையிலும் பல வரலாறுகளும், அரசியலும், நிகழ்கால ஓட்டங்களும் புதைந்து கிடக்கின்றன. அண்ணாவுக்கு அவர் எழுதிய இரங்கல் அறிக்கையிலே 'அண்ணா நிழலாய் இருந்தாய்; நீயே நிலத்தடியில் நிழல் தேடச் சென்றது நியாயம்தானா' என்று குறிப்பிட்ட அந்த வாசகங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. பெரியார் இறந்துவிட்டார். பெரியாருக்கு அவர் சுருக்கமாக எழுதுகிறார், 'பெரியார் தன் சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார்'. ஓர் ஆழமான வருத்தத்தை, மிகப் பெரிய சோகத்தை ஒற்றை வரியில் எழுதக்கூடிய சாமர்த்தியத்தை அவர் பெற்றிருந்தார் என்பதை நாம் பார்க்கின்றோம். பெரியாருடைய பேரனாகவும், அண்ணாவினுடைய கொள்கைத் தம்பியாகவும், பொன்மனச் செம்மல் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நண்பனாகவும் திகழ்ந்தார் என்பதை நாம் பார்த்திருக்கின்றோம்.

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2019 ஜனவரி 3 முற்பகல் 11-30

ஒருமுறை விகடன் பத்திரிகையிலே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் அம்மா அவர்களிடம் ஒரு கேள்வி வருகிறது. என்ன கேள்வி என்று சொன்னால், கலைஞரிடம் உங்களுக்குப் பிடித்தது எதுவென்று கேட்டபோது, அம்மா அவர்கள் பதிலளிக்கிறார்கள். 'அவருடைய தமிழ்' என்று பதிலளிக்கிறார்கள்.மாற்றாரையும் தன்னுடைய தமிழ்த் திறமையின் மூலமாக வென்றெடுத்தவர் நம்முடைய மரியாதைக்குரிய ஐயா கலைஞர் அவர்கள் என்பதை நினைக்கின்றபோது, அவர் இருந்த அவையிலே நாமெல்லாம் இருந்தோம் என்பதே ஒரு வரலாற்றுச் சிறப்பாகும்.

சமூக நீதியிலே அவர் ஆற்றிய பணிகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். முஸ்லிம்களுக்கு மூன்றரை சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியவர். அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீட்டை வழங்கியவர். அதுமட்டுமல்ல; திரு. வி.பி. சிங் அவர்களை பிரதமர் பதவியிலே அரியணை ஏற்றியவுடன் மண்டல் கமிஷனை அமல்படுத்துவதிலே மிகப் பெரிய தூண்டு சக்தியாக அவர் தேசிய அளவிலே திகழ்ந்தார் என்பதை இங்கே நான் நன்றியோடு குறிப்பிட்டாக வேண்டும். அதுபோன்று, முதன் முதலிலே பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு தனித் துறையை உருவாக்கியவர்; கொங்கு வேளாளர் இனத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், வன்னியர் சீர் மரபினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் சேர்த்தவர் என்ற வகையிலே, அவருடைய சமூக நீதிப் பங்களிப்பை சொல்லிக் கொண்டே செல்லலாம். அதேபோன்று, குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா என்றெல்லாம் அவருடைய படைப்புகள் அனைத்தும் வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு பால பாடம் என்பதை மறந்துவிடக் கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்டு எல்லோருமே நம்முடைய இரங்கலை இங்கே பதிவு செய்திருக்கின்றோம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள் மிகச் சிறப்பாக அவருடைய கருத்துகளைப் பட்டியலிட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும், மற்றவர்களும் இங்கே இரங்கலைப் பதிவு செய்தார்கள். கடைசியாக ஒன்றைச் சொல்லி, நான் நிறைவு செய்கின்றேன்.

*2019 ஜனவரி 3]* [திரு. எம். தமிமுன் அன்சாரி]

*மிகச் சிறந்த பத்திரிகையாளராகத் திகழ்ந்த அவர், செய்தியாளர்கள் கேட்க முடியாத அல்லது செய்தியாளர்கள் கேட்கத் தவறிய கேள்விகளை எல்லாம் முரசொலியிலே கேள்வி-பதில் அறிக்கையின் மூலமாகக் கொடுத்து, அதன் மூலமாக தமிழ்ச் சமூகத்திற்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய ஒரு மிகச் சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். அன்னார் அவர்களுடைய மறைவு என்பது நம்முடைய திராவிட இயக்கத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பு என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை என்பதையும், அன்னார் அவர்களை இழந்து வாடக்கூடிய இந்த அவையிலே இருக்கக்கூடிய அனைவருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், அவருடைய குடும்பத்தினர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் எங்களுடைய நெஞ்சார்ந்த இரங்கலைப் பதிவு செய்து, விடைபெறுகிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த முறையிலே பணியாற்றிய 12 முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவிற்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முன்னாள் பாரதப் பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் பல முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையிலே பணியாற்றியவர். பாரதிய ஜனதா கட்சியினுடைய மூத்த தலைவர். பாரதிய ஜனதா கட்சியினுடைய முதல் பாரதப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*அதேபோல், தமிழக முன்னாள் ஆளுநர், மக்களவை முன்னாள் தலைவர், புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர் அவர்கள் மறைவிற்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த 'நெல்' ஜெயராமன் அவர்கள் டெல்டா பாசன விவசாயிகளுக்கு நன்கு அறிமுகமானவர். 'நெல்' ஜெயராமன் என்று சொன்னாலே, வேளாண் பெருமக்களுக்கு பேருதவியாகத் திகழ்ந்தவர் என்ற பாராட்டுக்குரியவர். விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த 'நெல்' ஜெயராமன் அவர்கள் மறைவிற்கும் இந்த நேரத்திலே இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 3

மருத்துவர் எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் ஏழைகளுக்குக் குறைந்த கட்டணத்திலே மருத்துவம் செய்து, பெயர் பெற்றவர். அவருடைய மறைவிற்கும் இரங்கலைத் தெரிவித்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு 'கஜா' புயலால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த திரு. ஏ.கே. போஸ் அவர்கள் 1972 ஆம் ஆண்டு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே தன்னைக் கழக உறுப்பினராக இணைத்துக் கொண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே நெருக்கமாக இருந்து, அவர் தொண்டரணியிலே மிகவும் துடிப்புடன் செயல்பட்டு சிறந்த பணியாற்றியவர். அவருடைய மறைவிற்குப் பிறகு, கழகத்திலே சிறந்த முறையிலே பணியாற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனதிலே இடம்பெற்று, 2004 ஆம் ஆண்டு மதுரை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பைப் பெற்றார். 2006 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பாகப் போட்டியிடுவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாய்ப்பு கொடுத்து, அந்தத் தொகுதியிலே வெற்றிபெற்று சிறந்த முறையிலே பணியாற்றியவர்.

*முற்பகல் 11-35*

கழகத்திலே மதுரை மாநகர மாவட்டக் கழக அவைத் தலைவராக சிறந்த முறையிலே பணியாற்றி, பிறகு மதுரை மாநகர மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நியமிக்கப்பட்டு, சிறந்த முறையிலே பணியாற்றியவர். 2011-ல் கழகத்தின் சார்பாக மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, வெற்றி பெற்று சிறந்த முறையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். 2016-லே திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில் போட்டியிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவர் அந்தத் தொகுதியிலே வெற்றி பெற்று, சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருந்தார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீதும், கழகத்தினுடைய தலைமைமீதும் மிகுந்த விசுவாசம் கொண்டு பணியாற்றியவர் மறைந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்

*2019 ஜனவரி 3]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*திரு. ஏ.கே. போஸ் அவர்கள். கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும்கூட இவருடைய பணி சிறப்பாக அனைவராலும் போற்றப்பட்டது. கழகத்தின் சார்பாக நடைபெற்ற அனைத்து ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொள்ளக் கூடியவர். கழகத்தின் சார்பாக அறிவிக்கப்பட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றிருக்கின்றார். இவர் கழகத் தொண்டர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் அன்பாக, எளிமையாகப் பழகக்கூடியவர். இவர் உடல் நலம் சரியில்லாமல் 1-8-2018 புதன்கிழமை அன்று மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 2-8-2018 வியாழக்கிழமை விடியற்காலை சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தியுள்ளார். மறைந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களின் மறைவு கழகத்திற்கு பேரிழப்பையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதைக் குறிப்பிட்டு, அன்னாரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், இந்தியாவின் மிக மூத்த அரசியல்வாதியும், 50 ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*1937-ல் அரசுப் பள்ளிகளில் இந்திப் படிப்பு கட்டாயமாக்கப்பட்டது. அதனைக் கண்டித்து, நீதிக் கட்சி தொடர் போராட்டங்களை முன்னெடுத்தது. 13 வயதிலேயே அன்னார் இந்தப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டவர். தன் பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து 'இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு' என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் நடத்தினார். போராட்டத்திற்கு மாணவர்களைத் திரட்ட அந்த சிறு வயதிலேயே 'மாணவ நேசன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தியவர். 17 வயதில் தமிழ்நாடு மாணவர் மன்றத்தின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர்.*

*1942-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய திராவிட நாடு பத்திரிகையில் அன்னார் எழுதிய 'இளமைப்பலி' என்ற படைப்பு வெளியானது. அப்படைப்பு பேரறிஞர் அண்ணா அவர்களைப் பெரிதும் கவர, திருவாரூரில் ஒரு விழாவுக்காக வந்திருந்த அவர், அன்னாரை அழைத்துப் பாராட்டினார்.*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 3

1957 ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குள் நுழைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 13 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும், ஒரு முறை சட்டமன்ற மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையிலே, பாராட்டுதலுக்குரிய அளவிற்குப் பணியாற்றியவர்.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோது அவருடைய அமைச்சரவையில் போக்குவரத்து மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்து, திறம்பட பணியாற்றியவர்.

கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஐந்து முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தவர் என்ற பெருமைக்குரியவர். அரசியல் மட்டுமின்றி, தமிழ் இலக்கியம், தமிழ் திரைப்படங்களில் திரைக்கதை, வசனம் போன்ற துறைகளில் தனது திறமையை வெளிப்படுத்தி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், வரலாறு என எல்லா இலக்கியத் தளங்களிலும் தனக்கென தனி முத்திரை பதித்தவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். 'பழனியப்பன்' என்ற நாடகமே கலைஞர் அவர்கள் முதன்முதலில் எழுதிய நாடகமாகும். திருவாரூரில் அந்த நாடகத்தை அரங்கேற்றம் செய்தார்.

'தூக்குமேடை', 'சிலப்பதிகாரம்', 'மணிமகுடம்', 'ஒரே ரத்தம்', 'காகிதப்பூ', 'நானே அறிவாளி', 'வெள்ளிக்கிழமை', 'திருவாளர் தேசியம்பிள்ளை', ' அனார்கலி', 'சாம்ராட் அசோகன்', 'சேரன் செங்குட்டுவன்', 'நாடகக்காப்பியம்' உள்ளிட்ட பல நாடகங்களை அவர் எழுதியுள்ளார். 'தூக்குமேடை' நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்த நடிகவேள் திரு. எம்.ஆர். ராதா அவர்கள் 'கலைஞர்' என்ற அடைமொழியை அவருக்கு வழங்கினார்.

முற்பகல் 11-40

'நளாயினி', 'பழக்கூடை' உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். 'புதையல்', 'வான்கோழி', 'சுருளிமலை', 'ஒரு மரம் பூத்தது', 'ஒரே ரத்தம்', 'ரோமாபுரி பாண்டியன்', 'தென்பாண்டிச் சிங்கம்', 'பொன்னர் சங்கர்' ஆகிய நாவல்களையும் எழுதியிருக்கிறார். 'தென்பாண்டிச் சிங்கம்' நாவல் 1989 ஆம் ஆண்டுக்கான தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின்

*2019 ஜனவரி 3]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*'ராஜராஜன்' விருதைப் பெற்றது. திருக்குறளை ஆய்ந்து எளிய நடையில் எழுதிய 'குறளோவியம்' கலைஞர் அவர்களின் முக்கிய இலக்கியப் படைப்பாகும். 'நெஞ்சுக்கு நீதி' என்ற பெயரில் தன் வாழ்க்கை நிகழ்வுகளை 6 தொகுதிகளாகவும் வெளியிட்டிருக்கின்றார்.*

*'சங்கத் தமிழ்', 'தொல்காப்பியப் பூங்கா', 'இனியவை இருபது', 'மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று', 'மலரும் நினைவுகள்', 'கலைஞரின் கவிதை மழை', 'இளைய சமுதாயம் எழுகவே' உள்பட 178 நூல்களை கலைஞர் அவர்கள் எழுதியுள்ளார்கள். தமிழ் மொழிக்காக அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது.*

*தமிழ்நாடு அரசியல் மட்டுமின்றி, இந்திய அரசியலிலும் தனது முத்திரையைப் பதித்தவர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பாராட்டத்தக்க அளவில் பணியாற்றியிருக்கின்றார். அவருடைய ஆட்சிக்காலத்தில் தீட்டப்பட்ட சில திட்டங்களையும்,இயற்றப்பட்ட சில சட்டங்களையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் மக்கள் நலன் கருதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் வரவேற்றிருக்கின்றோம். அதேசமயத்தில், கொள்கைரீதியில் மாறுபாடு இருக்குமேயானால், அதனை நாங்கள் எதிர்த்தும் இருக்கின்றோம்.*

*மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நானும் 1989 ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இம்மாமன்றத்தில் காலடி எடுத்து வைத்தபோது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்போது நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் உரையாற்றியபோது, "சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால் 50 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு அரை இலட்சம்தான். ஆனால், நம்முடைய லட்சியம் இலட்சம். இந்த இலட்சத்தை வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே இலட்சியமாக அறிவிப்பதற்கும், இன்னும் பல கோரிக்கைகளைச் செய்வதற்கும் நம்முடைய முதல்வர் அவர்கள் காத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். உடனே பதிலளித்த அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "என்னுடைய லட்சியம் உறுப்பினர் திரு. சிங்காரம்*

அவர்கள் நீண்ட காலம், பல ஆண்டு காலம், பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ வேண்டும் என்பதுதான்" என்று சொன்னார்கள். கோரிக்கையை அப்போது ஏற்கவில்லை என்றாலும், கோரிக்கை வைத்தவர்கள் மனம் மகிழ்கின்ற வகையில் பதில் சொல்கின்ற வல்லமை பெற்றவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு, காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது, நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல்நலம் குறித்து விசாரித்தோம். வயது மூப்பின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது; விரைவில் உடல் நலம் தேறி, மீண்டும் தன்னுடைய அரசியல் பணியைச் செய்வார் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்த நேரத்தில், அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி எங்களுக்கு அதிர்ச்சியாக அமைந்தது. நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நேரிலே சென்று, மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினோம்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அரசியல் வாழ்க்கைக்கு, அவரிடமிருந்த பன்முக ஆற்றல் காரணமாக அமைந்தது. அவர் கதை, வசனம் எழுதிய 'பராசக்தி' என்ற திரைப்படத்தின்மூலம் தான் ஒரு பகுத்தறிவாளன் என்பதை சமுதாயத்திற்கு தெரியப்படுத்தினார். அதன் பிறகு, அவர் கதை, வசனம் எழுதிய படங்களிலெல்லாம் சமுதாய விழிப்புணர்வுக் கருத்துகளைப் பதிவு செய்திருந்தார். 'ராஜகுமாரி', 'மலைக்கள்ளன்', 'திரும்பிப்பார்', 'ராஜா ராணி', 'மந்திரிகுமாரி', 'பூம்புகார்', 'மனோகரா', 'புதுமைப்பித்தன்', ' அரசிளங்குமரி', 'இருவர் உள்ளம்', 'எங்கள் தங்கம்', 'குறவஞ்சி' என 75-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதியிருக்கிறார். கலைஞர் அவர்களின் 'பொன்னர் சங்கர்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு அதே பெயரில் திரைப்படம் உருவாக்கப்பட்டது. எளிய தோற்றம், இனிய பண்பு, எல்லோரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய குணம் அவரிடம் அமைந்திருந்தது.

இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த திரு. ஜவஹர்லால் நேரு முதல் தற்போது பிரதமராக இருக்கும் திரு. நரேந்திர மோடி

*2019 ஜனவரி 3]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வரை அனைத்து பிரதமர்களையும் கண்ட பெருமை அவருக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவர் பிறக்கின்றார், வாழ்கின்றார், மறைகின்றார்; அந்த இடைப்பட்ட காலத்திலே அவர் செய்த சாதனை என்றைக்கும் இந்த மண்ணிலே நிலைத்திருக்கும். அந்த வகையிலே, கலைஞர் அவர்கள் செய்த சாதனை இந்த மண்ணிலே நிலைத்து நிற்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, அவருடைய மறைவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அவரைப் பிரிந்து வாடும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், அவர் கட்சியைச் சேர்ந்த நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை மீண்டும் தெரிவித்து, அமைகின்றேன். வணக்கம்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலிருந்து என்னுடைய நெருங்கிய நண்பராக இருந்த அன்புச் சகோதரர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் மூன்று முறை தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றினார்கள். எதிர்க்கட்சி வரிசையிலும், ஆளுங்கட்சி வரிசையிலும் சிறப்பாகப் பணியாற்றிய அனுபவம், அவருக்கு உண்டு. அனைவருடனும் அன்பாகவும், மென்மையாகவும் பழகக்கூடிய பண்பு கொண்டவர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

அதேபோன்று, 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நான் இந்த மன்றத்திற்கு முதன்முதலிலே சட்டமன்ற உறுப்பினராக வந்த காலத்திலிருந்து முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் நேரிலே, அருகிலே இருந்து பார்த்து, அவருடைய தமிழைக் கேட்கிற பெரிய வாய்ப்பு எனக்கு இந்த மன்றத்திலே கிடைத்தது. தொடர்ந்து நான் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், அவர் எதிர்க்கட்சித் தலைவராக இந்த மன்றத்திலே இருந்து பணியாற்றியதை நான் நினைத்துப் பார்க்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய சட்டமன்ற நடவடிக்கைகளை நான் பார்த்து வருகிறேன். கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். 1980 மற்றும் 2001 ஆம் ஆண்டு தேர்தலிலும் நாங்கள் இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றியுள்ளோம். பேரவையிலே விவாதம் நடக்கையிலே

சிறப்பாக உரையாற்றுவார்கள். திரைப்படத் துறை, இலக்கியத் துறை, அரசியல் துறை என முத்துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி, 'கலைஞர்' என்று அனைத்து மக்களாலும் பாராட்டப்பட்டவர். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் இந்த அவையிலே தெரிவித்த கருத்துகளோடு, அவரை இழந்து வாடுகிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அவருடைய தொண்டர்கள் அனைவருக்கும் என்னுடைய தனிப்பட்ட முறையிலான ஆழ்ந்த இரங்கலையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த பெருந்தகைகள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி ஆகிய இருவருக்கும் மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை 4-1-2019 (வெள்ளிக்கிழமை), காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

——